<u>**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். வாதியை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். வாதியின் மைத்துனர் வெங்கட்ராயலு என்பவர் மூலம் எனக்கு வாதி அறிமுகம் ஆனார். நான் உளுந்தூர் பேட்டையில் தங்கராசு என்ற அடகு கடையை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். தங்கராசு என்பது என் தகப்பனாரின் பெயர் என்றால் சரிதான். தற்போது அந்த கடையை என் மகன் நடத்தி வருகிறார். இதை தவிர நான் ஒரு டிராவல்ஸ் ஏஜென்சி நடத்தி வருகிறேன் என்றால் இல்லை, என் மகன் நடத்தி வருகிறார். உளுந்தூர்பேட்டையில் TDJ என்ற குடியிருப்பு வளாகம் எனக்கு உள்ளது என்றால் சரிதான். 2017 முதல் 2020ம் ஆண்டில் நான் அஇஅதிமுக என்ற அரசியல் கட்சியில் பொறுப்பில் இருந்தேன் என்றால் இல்லை. எனது மகன் திருமண பத்திரிக்கையில் எனது பெயரை அச்சிட்டு அதற்கு கீழ் அதிமுக மேலவை பிரதிவாதி என்று பதவியின் பெயர் காட்டியுள்ளேன் என்றால் அது நான் முன்பு வகித்த பதவியாகும். அதனை தவறுதலாக திருமண அழைப்பிதழில் காட்டிவிட்டேன். அந்த திருமண பத்திரிக்கை வா.சா.ஆ.5. வா.சா.ஆ.1-ல் இருப்பது என் கையொப்பம் தான். வா.சா.ஆ.1-ல் உள்ள தொகையை நான் திரும்ப கொடுத்துவிட்டேன். நான் பிரதிவாதியிடம் ரூபாய் 10 லட்சமும், ரூபாய் 5 லட்சமும் இரண்டு தவணையாக வாங்கினேன். அந்த தொகையை நான் பல தவணைகளில் திரும்ப செலுத்திவிட்டேன். அதற்குரிய ரசீது என்னிடம் உள்ளது. அந்த ரசீதுகளை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அவருக்கு வங்கி மூலம் அந்த பணத்தை செலுத்தினேன். நான் வாதிக்கு வா.சா.ஆ.3 மூலம் கொடுத்த பதில் அறிவிப்பில் 08.11.2017 தேதியிட்ட கடனுறுதி சீட்டில் கண்ட தொகையை திரும்ப செலுத்திவிட்டேன் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் ரூபாய் 15 லட்சத்தை இரண்டு தவணையாக பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு எந்த தேதியில் ரூபாய் 15 லட்சத்தை திரும்ப செலுத்தினேன் என்ற விவரத்தை பதில் அறிவிப்பிலோ, எதிர் வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லவில்லை. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4-ல் உள்ள XXXXXXXXX என்கிற கணக்கு எண் என்னுடையதுதான். நான் டிசம்பர் 2017ல் இருந்து

செப்டம்பர் 2019 வரை மாத, மாதம் ரூ.30,000/- வாதியின் வங்கி கணக்கில் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் வாதிக்கு பணத்தை செலுத்திய பிறகு கடனுறுதி சீட்டை திரும்ப கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வாதியின் மைத்துனர் மூலம் கேட்டேன். வாதியிடம் கடனுறுதி சீட்டை திரும்ப கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வாதியிடம் ரூபாய் 30 லட்சம் கடன் வாங்கியது உண்மை என்றும், அதற்காக நான் மாத, மாதம் ரூ.30,000/- வட்டி செலுத்தினேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 வங்கி கணக்கு பட்டியலை நான் பொய் என்று கூறியுள்ள நிலையில் அதனை வங்கியில் இருந்து வரவழைக்க எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. நான் குறிப்பிடுவதை போல வாதிக்கு பணம் எதுவும் கைப்படக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு தற்சமயம் 80 வயது ஆவதால் அவரை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**